

தலைமைச் செயலகத்தில் நேற்று (05.11.2024) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில், நீர்வளத் துறை பொறியாளர்களுடன் சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புப் பணிகளின் முன்னேற்றம் குறித்து கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நீர்வளத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன், திட்ட இயக்குநர் / கூடுதல் தலைமைச் செயலாளர் தென்காசி க. ஜவஹர், நீர்வளத் துறை அரசு கூடுதல் செயலாளர் திருமதி சு.மலர்விழி, முதன்மைத் தலைமைப் பொறியாளர் சா.மன்மதன், சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் திருமதி மு. ஜானகி மற்றும் அனைத்து சென்னை மண்டல பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.




சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதி தெற்கு, வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தொகுதி பொறுப்பாளர் என்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் பகுதிச் செயலாளர்கள் எம்.சாமிகண்ணு, செ.தமிழ்வேந்தன் நன்றி கூறினர். மேயர் பிரியாராஜன், டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி., ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., சரிதா மகேஷ்குமார் எம்.சி., மாவட்ட அமைப்பாளர்கள், டி.லோகேஷ், ந.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், இரா.வீரமணி, க.ராஜ்முகமது, பி.உதயசங்கர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு – முன்னிலை! மேயர் பிரியா ராஜன் தலைமை!

# சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் “என் உயிரினும் மேலான” கலைஞர் நூற்றாண்டுக் கருத்தரங்கம்!

## வழக்கறிஞர் அருள்மொழி – ம.சிவரஞ்சனி – ரூ.கீர்த்தனா சொற்பொழிவு ஆற்றினர்!

சென்னை, நவ.6-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. நடத்தும் “என் உயிரினும் மேலான” கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா கருத்தரங்கம் நேற்று 5.11.2024 - செவ்வாய்கிழமை, மாலை 6 மணிக்கு, சென்னை, எழும்பூர், ஆல்பர்ட் திரையரங்கம் அருகில், சிராஜ் மஹால், இம்பீரியல் ஹோட்டல் வளாகத்தில் நடைபெற்றது.

இப்பேச்சரங்கத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர், சென்னை மாநகராட்சி மேயர், பிரியா ராஜன் அவர்கள் தலைமையில், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பகுதிக் கழகச் செயலாளர்கள் வி.சுதாகர், சொ.வேலு எம்.சி, ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற குறிப்பாக 700க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற பேச்சரங்கத்தில் திராவிடர் கழகப் பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அ. அருள்மொழி, இளம் பேச்சாளர்கள் செல்வி. ம. சிவரஞ்சினி “மகத்தான வளர்ச்சி மருத்துவ புரட்சி” என்ற தலைப்பிலும் செல்வி. ரூ. கீர்த்தனா “நோயற்ற தமிழகமே எங்கள் இலக்கு” என்ற தலைப்பிலும் உரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் தமிழன்பிரசன்னா, பி.எம். யாழினி, கே.எஸ்.இரவிச்சந்திரன், கோ.ஏகப்பன், புனிதவதி எத்திராசன், பரிதிஇளம் சுருதி, கே.எஸ். எம்நாதன், கோ.மணி, அ. நிர்மலாதேவி, நந்தீஸ்வரன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், தாமோதரன், எல். சுந்தர்ராஜன், எஸ்.ரசூல், டி.வி. வேலு, எம்.மலர்மாறன், கோ.அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், ஆர்.பாபு என்ற சந்திரசேகரன், வான்மதி கதிரவன், எம். தில்லைகுமார், பி.சி.சம்பத்குமார், ஜெ.கே.கருணாகரன், கே.வள்ளி, சூளை சுப்பராயலு, தி.தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர். எம்.ரங்கநாதன், சி.சேகர், எல்.சுந்தர்ராஜன், பாத்திமா முசாபர் எம்.சி, மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் இப்பேச்சரங்கத்தில் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கழக சாதனை துண்டு பிரசூரம், கையேடு மற்றும் எழுது கோல் வழங்கப்பட்டது. இப்பேச்சரங்கத்தில் 61 (அ) வட்டக் கழகச் செயலாளர் இ.மொய்தீன், 61 வது வட்டக் கழகச் செயலாளர் எஸ்.டால்பின் ஹரி ஆகியோர் நன்றி கூறினர்.

# திரு.வி.க.நகர் தெற்கு, வடக்குப் பகுதிக் கழகக் கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு – என்.கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையாற்றினர்!

சென்னை, நவ. 6 -

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதி தெற்கு, வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தொகுதி பொறுப்பாளர் என்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர். பகுதிச் செயலாளர்கள் எம்.சாமிகண்ணு, செ.தமிழ்வேந்தன் நன்றி கூறினர்.

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதி தெற்கு, வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் கலந்தாலோசனை கூட்டம், நேற்று (5.11.24 செவ்வாய் கிழமை) மாலை 4.00 மணியளவில், சென்னை, எண்.186, பிரிக்லின் சாலை, ஒட்டேரி, எஸ். ஆர். பேலஸில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் தொகுதி பொறுப்பாளர் என்.கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையாற்றினர்.

இந்த ஆலோசனை கூட்டத்தில், மேயர் பிரியாராஜன், டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி., ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., சரிதா மகேஷ்குமார் எம்.சி., மாவட்ட அமைப்பாளர்கள், டி.லோகேஷ், ந.துலுக்காணம், எம். பெரோஸ்கான், இரா.வீரமணி, க.ராஜ்முகமது, பி. உதயசங்கர், வட்ட செயலாளர்கள்: எஸ்.சசிகுமார், எஸ்.வெங்கடேசன், எம். தமீம், பொல்லு (எ) டி.சுரேஷ்குமார், வி.கே. வெங்கடேசன், மா.ருத்ரமூர்த்தி, ஜி.கிருஷ்ணகுமார், எஸ்.புஷ்பராஜ், பரிமளா சுரேஷ்பாபு, எம்.ஏ.டீக்கா, அபோய்.

பகுதி கழக நிர்வாகிகள் அ.கோவிந்தன், த.கருணாநிதி, வி.சுகுமார், வனஜா சண்முகம், அ.கருணாநிதி, தில்லை கதிரவன், பெரம்பூர் ஆர்.ராஜன், புல்லட் கி.ரமேஷ், புவனவதி, கிணார் ஆறுமுகம். மாவட்ட பிரதிநிதிகள்: நெல்லை.மா.முத்தையா, கி.நாகலிங்கம், பா.பாபு மனோகர், வே.தாமரை செல்வன், எல்.சுப்பிரமணி, அ.கதிரவன், இரா. புருஷோத்தமன், எஸ். பாபு, எச்.திவாகர், அ.விஜயகுமார், வ.நாமதேவன், பி.சத்தீஷ், ஆர்.ராஜராஜன், பி.இளஞ்செழியன், பி.ராஜீ, ஸ்வீட் பாபு, வி.ஜெகன், க.எழிலன், பிரகாசம், சீனிவாசன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட துணைஅமைப்பாளர்கள், தொகுதி அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், BLA2, BLC உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் ஏற்பாடு! மாஸ்.டி.வெங்கடேசன் தலைமை! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை!

# ஆர்.கே.நகர் மேற்குப் பகுதி பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## ஆர்.டி.சேகர் ஆலோசனை வழங்குகிறார்! கலாநிதி வீராசாமி, கே.வி.லோகேஷ் பங்கேற்பு!

சென்னை நவ.6-

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி சார்பில் பாக முகவர்கள் (பிஎல்ஏ2) ஆலோசனைக் கூட்டம் இன்று (06.11.2024 புதன்கிழமை) மாலை 5.00 மகியளவில் நேதாஜி நகர் நாடார் உறவின் முறை திருமண மாளிகையில் நடைபெறுகிறது.

ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர் எஸ். ஜெபதாஸ்பாண்டியன் நிகழ்ச்சிகான ஏற்பாட்டினை செய்துள்ளார். மாஸ்.டி.வெங்கடேசன் தலைமை வகிக்கிறார்.

சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ முன்னிலை வகிக்கிறார்.

எம்.லோகநாதன், டி. திராவிடசெல்வி, பி.சீனிவாசன்,

மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன், எஸ்.எல்.சுந்தர், கி.தேவன், ஆர்.ஏ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, எம்.பி.ஆர். ராஜன், ஏ.மணிமேகலை எம்.சி ஆகியோர் வரவேற்கின்றனர்.

கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, கே.வி.லோகேஷ், ஆகியோர் ஆலோசனை வழங்குகின்றனர்.

இரா.லட்சுமணன், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, ஏ.டி.மணி, டாக்டர்.கலைவாணன், எஸ்.எம்.பரசுராமன், எம்.விமலா, இ.ரவிக்குமார், எஸ்.சொக்கலிங்கம், பா.வேதாச்சலம், ஜி.ராஜா,மீஞ்சூர் ஜி.முகுந்தன்,டி.சங்கர், கே.ஜானகிராமன், எஸ்.கென்னடி மற்றும் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள்,பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து கழக நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் எஸ். ஜெபதாஸ்பாண்டியன் கேட்டுக்கொண்டுள்ளார்.

எம்.கோவிந்தராஜ் நன்றி கூறுகிறார்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் 161 வட்டக் கழக நிர்வாகி கார்த்திக் மகள் மகிழினி முதல் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசனை சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் பகுதிச் செயலாளர் குணாளன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், எம். ஆர்.சீனிவாசன், கலாநிதி, சுலைமான், தீபக், வாசிம், சண்முகம், உதயா, விக்கி, திலீப், சந்துரு, கழகத்தினர் உள்ளனர்.

### இ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமை! ராமச்சந்திர ராஜா நிகழ்ச்சி ஏற்பாடு!

# முன்னாள் நகர் மன்றத் தலைவர் கே.அடைக்கலம் 75 வது பிறந்தநாள் விழா!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் நலஉதவிகள் வழங்கினார்!

பல்லாவரம், நவ. 6 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பல்லாவரம் நகராட்சி முன்னாள் நகர மன்றத் தலைவர் (நினைவில் வாழும்) கே.அடைக்கலம் அவர்களின் 75 வது பிறந்தநாள் விழா குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகில் மாநகரப் பிரதிநிதி ராமச்சந்திர ராஜா நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெற்றது.

பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக் கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு 500 க்கு மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு புடவை, குடிநீர் பாட்டில், ஹாட் பேக், குடை, பிரியாணி போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், பல்லாவரம் மண்டலத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, பம்மல் மண்டலத் தலைவர் வே.கருணாநிதி, பகுதி கழகச் செயலாளர் த.ஜெயக்குமார், பகுதிக் கழகச் செயலாளர் இ.எஸ். பெர்னார்ட், செம்பாக்கம் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உடன் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்ட கழகப் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்குகிறார்!

# ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதி பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## கலாநிதி வீராசாமி, கே.வி.லோகேஷ் பங்கேற்பு ! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை ! இரா.லட்சுமணன் தலைமை !

சென்னை நவ.6-

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி சார்பில் பாக முகவர்கள் (பிஎல்ஏ2) ஆலோசனைக் கூட்டம் இன்று (06.11.2024 புதன்கிழமை) மாலை 6.00 மணியளவில் எஸ்.எஸ்.மஹால் இளையதெரு, சென்னை -81ல் நடைபெறுகிறது.

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா. லட்சுமணன் தலைமை வகிக்கிறார். சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம். எல்.ஏ, முன்னிலை வகிக்கிறார்.

என்.அனிபா, ஆர். டி.ராஜா, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், ஆகியோர் வரவேற்கின்றனர்.

கூட்டத்தில் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆர்.கே.நகர் தொகுதி பொறுப்பாளர் கே.வி.லோகேஷ், ஆகியோர் ஆலோசனை வழங்குகின்றனர்.

இரா.மதிவாணன், எஸ். ஜெபதாஸ்பாண்டியன், ஆர்.வெற்றிவீரன், என். மருதுகணேஷ், என்.எம். கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜன், பா.குமார், ச.தமிழ்செல்வன், பொ.து. ராஜா, வீ.வடிவேல், வெ.சு.சத்தியநாராயணன், இர.பொன்இளவரசன், சி.மணிகண்டன், எ. ரமேஷ் பாபு, பி.சதிஷ்குமார், எம்.எம்.சாமி, ஆர். ரமேஷ், பி.அன்பழகன், வி.முத்து, கே.மோகன், ஜெ.சுரேஷ்பாபு, பி.கே. மூர்த்தி, எம்.ரூபசங்கர், சா.திருப்பதிசாமி, டி.ஆர். தணிகாசலம், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், அனைவரும் கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

கே.பாலு நன்றி கூறுகிறார்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் – பரிதி இளம்சுருதி பங்கேற்பு!

# சைதை கிழக்குப் பகுதி தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் வேண்டுகோள்!

சென்னை, நவ.6-

வருகிற 2026 சட்டமன்ற தேர்தலை சிறப்பாக எதிர்கொள்ளும் வகையில் சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதி தி.மு.க. ஆலோசனை கூட்டம் இன்று (6.11.2024 புதன்கிழமை) மாலை 5.00 மணிக்கு நடைபெற உள்ளதாக பகுதி செயலாளரும், 13-வது வார்டு குழு தலைவருமான இரா.துரைராஜ் அறிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சரும், சென்னை தெற்கு மாவட்ட செயலாளருமான மா.சுப்பிரமணியன் வேண்டுகோள் படி சைதை கிழக்கு பகுதி தி.மு.க. ஆலோசனை கூட்டம் 06.11.2024 புதன்கிழமை, மாலை 5.00 மணிக்கு சென்னை 42, வேளச்சேரி, நேரு நகர் நெடுஞ்செழியன் தெருவில் அமைந்துள்ள சைதை கிழக்குப் பகுதி தி.மு.க. அலுவலகத்தில் பகுதி அவைத்தலைவர் இ.முருகேசன் தலைமையில், தலைமை செயற்குழு உறுப்பினரும், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயருமான மு.மகேஷ் குமார், மாவட்ட அவை தலைவர் எஸ்.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர்களான சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், பகுதி நிர்வாகிகள் ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு.பாக்கியலட்சுமி முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்த ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், சைதை தொகுதி மேலிட பார்வையாளர் பரிதி இளம்சுருதி ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனை வழங்குகிறார்கள்.

எனவே நமது சைதை கிழக்கு பகுதியில் உள்ள வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் தலைவர்கள் , துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், அனைவரும் குறித்த நேரத்தில் தவறாமல் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு இரா.துரைராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று (5.11.2024) எழும்பூர் தொகுதி, புரசைவாக்கம், இராட்லர் தெருவில் அமைந்துள்ள கிளை நூலகத்தை வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் மேம்படுத்தி, பகிர்ந்த பணியிடம் (Coworking Space) மற்றும் கல்வி மையம் அமைப்பதற்காக களஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, மண்டலக் குழுத்தலைவர் ஸ்ரீராமுலு, சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ். ருத்ரமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார், பாலமுருகன், மாவட்ட நூலக அலுவலர் திருமதி.கவிதா, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் வி.சுதாகர், சொ.வேலு, மாமன்ற உறுப்பினர் திருமதி.ராஜேஸ்வரி ஸ்ரீதர் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.